**சுருக்கம்**

பேரூராட்சி – பகுதி II திட்டங்கள் 2009–2010 – 28 பேரூராட்சிகளில் ரூ.560.00 இலட்சம் செலவில் புதிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல் – நிருவாக ஒப்பளிப்பு மற்றும் 40% தொகையான ரூ.225.00 இலட்சம் விடுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

**அரசாணை (2ப) எண்: 115** **நாள்: 19/11/2009**

3, கார்த்திகை, திருவள்ளுவராண்டு 2040

படிக்கப்பட்டது

பேரூராட்சிகளின் இயக்குநரின் ந.க.எண் 20391/2008/பி1,
நாள் 07.01.2009

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் ஆணையர் பெரும்பான்மையான பேரூராட்சி அலுவலகக் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் புதிய கட்டிடங்கள் கட்டப்பட வேண்டிய பேரூராட்சிகளில் முன்னுரிமை அடிப்படையில் 28 பேரூராட்சிகள் 2009–2010–ம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன என்றும் இந்த பேரூராட்சிகளின் நிதி நிலைமை போதுமானதாக இல்லாததால், புதிய கட்டுமானப் பணி பகுதி–2 திட்டத்தின் கீழ் நிறைவேற்றிட திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இந்த 28 பேரூராட்சிகளுக்கு பேரூராட்சி ஒன்றுக்கு ரூ.20.00 இலட்சம் செலவு மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டும் பணிக்காக ரூ.560.00 இலட்சம் தேவைப்படுகிறது என்றும் இதற்கான ஒப்புதலை வழங்குமாறும் அரசைக் கேட்டுள்ளார்.

2. மேலே பத்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ள பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, 2009–2010–ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 28 பேரூராட்சிகளில், பேரூராட்சி ஒன்றுக்கு ரூ.20.00 இலட்சம் செலவில் புதிய கட்டிடங்கள் மொத்தம் ரூ.560.00 இலட்சம் செலவில் கட்ட நிருவாக ஒப்பளிப்பு அளித்தும், ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் உடனடியாக ரூ.225.00 இலட்சம் விடுவித்தும் ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொடரா செலவினத் தொகையானது பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"**2217-** நகர்ப்பகுதி வளர்ச்சி–**80**–பொது – **193** – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்–**II** மாநிலத் திட்டம் – **JB** இருபத்தெட்டு பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலகக்கட்டிடங்கள் கட்டுதல்–**09**– உதவித்தொகை – **02** மூலதனச் செலவிற்கான உதவித்தொகை
**(கு.தொகு. 2217–80–193–JB 0921)**

4. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை பத்தி (2)–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை இணைப்பில் குறிப்பிட்டுள்ள 28 பேரூராட்சிகளுக்கும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 40% தொகையினை, விரிவான திட்ட அறிக்கை தயாரித்து பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்றவுடன் பகிர்ந்தளிக்குமாறும் மீதி உள்ள 60% தொகையான ரூ.335.00 இலட்சத்தினை 2010–11ம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யக் கோரி கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு நேரடியாக அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.67041/(நநி(ம)குவ)/2009 நாள் 18.11.2009 இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு செயலாளர்.

பெறுநர்

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.(இ)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை–1. (இ)
இயக்குநர்,
உள்ளாட்சிகளின் கணக்கு தணிக்கைத்துறை,
சென்னை–108. (இ)
உதவி இயக்குநர், பேரூராட்சிகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்கள் (இ)
மாநில கணக்குத் துறை தலைவர், சென்னை – 18/35. (இ)
நகல்
செயலரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–9. (இ)
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2 / வரவு செலவு) துறை
சென்னை–9 (இ)
நிதி (ந.நி(ம)கு.வ / W & M-I/வ.செ.) துறை, சென்னை–9. (இ)
உதிரி/நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்

<u>பகுதி–2 திட்டம்</u>

<u>புதிய அலுவலக கட்டிடம் கட்டுதல் 2009–2010</u>

| வ.எண் | மாவட்டம் | பேரூராட்சியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | காஞ்சிபுரம் | நந்தம்பாக்கம் | 20.00 |
| 2 | திருவண்ணாமலை | போளூர் | 20.00 |
| 3 | | பெரணமல்லூர் | 20.00 |
| 4 | வேலூர் | காவேரிபாக்கம் | 20.00 |
| 5 | சேலம் | பெத்தநாய்க்கன்பாளையம் | 20.00 |
| 6 | | ஜலகண்டாபுரம் | 20.00 |
| 7 | நாமக்கல் | பிள்ளாநல்லூர் | 20.00 |
| 8 | | வெண்ணந்தூர் | 20.00 |
| 9 | ஈரோடு | கன்னிவாடி | 20.00 |
| 10 | | சென்னிமலை | 20.00 |
| 11 | | கொல்லன்கோவில் | 20.00 |
| 12 | கோயம்புத்தூர் | சூலூர் | 20.00 |
| 13 | | ஜமீன்ஊத்துக்குளி | 20.00 |
| 14 | கடலூர் | புவனகிரி | 20.00 |
| 15 | விழுப்புரம் | அனந்தபுரம் | 20.00 |
| 16 | தஞ்சாவூர் | மதுக்கூர் | 20.00 |
| 17 | | அம்மாப்பேட்டை | 20.00 |
| 18 | திருச்சி | உப்பிலியபுரம் | 20.00 |
| 19 | அரியலூர் | வரதராசன்பேட்டை | 20.00 |
| 20 | திண்டுக்கல் | சின்னாளப்பட்டி | 20.00 |
| 21 | | தாடிக்கொம்பு | 20.00 |
| 22 | மதுரை | அ.வல்லாளபட்டி | 20.00 |
| 23 | தேனி | வீரபாண்டி | 20.00 |
| 24 | சிவகங்கை | கண்டனூர் | 20.00 |
| 25 | விருதுநகர் | காரியபட்டி | 20.00 |
| 26 | திருநெல்வேலி | மூலக்கரைப்பட்டி | 20.00 |
| 27 | | வீரவநல்லூர் | 20.00 |
| 28 | கன்னியாகுமரி | ரீத்தாபுரம் | 20.00 |
| | மொத்தம் | | 560.00 |

(ரூபாய் ஐநூற்று அறுபது லட்சம் மட்டும்)

**நிரஞ்சன்மார்டி**
**அரசு செயலாளர்.**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.